**கவனிக்க.-** *2010.03.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1647 - 2010 මාර්තු මස 26 වැනි සිකුරාදා - 2010.03.26**

*1647 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 680 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 680 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 681 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 682 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 683 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மாச்சு மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

## திருத்தம்

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/250ஏவை (1).

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

2009, சனவரி மாதம் 09 ஆந் திகதிய 1584 ஆம் இலக்கம் உடைய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற இலங்கைத் தரைப்படை நிரந்தரப் படையின் அதிகாரவாணைக்கு நியமனம் செய்யப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-

2009 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்கமுடைய அறிவித்தல்

அகற்றுதல் போ/ 34345 ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II ரத்னமலல இருகல் பண்டாரலாகே பிங்ஹாமிகே அயகந்த பண்டார-இலங்கை சிங்க அணி (விசேட படைப்பிரிவு)

உட்புகுத்தல் போ/ 34345 ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II ரத்னமலல இருகல் பண்டாரலாகே அதிகரத்ன பண்டார-இலங்கை சிங்க அணி (விசேட படைப்பிரிவு)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2010, பெப்புருவரி 25.

3-846

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 58

அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் நியமனங்கள்:

1. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக திரு. என். ஏ. அதுகோரள அவர்கள் 2009.02.02 ஆந் திகதியிலிருந்து மறுஅறிவித்தல் வரை விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் கடமையை நிறைவேற்றும் மேலதிகச் செயலாளராக.

2. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. எம். கே. முஹைஸ், விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.04.01 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

3. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. பி. நிகமுனி அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.08.19 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

4. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. ரீ. கே. பெர்னாந்து இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.09.01 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

5. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. பீ. ஜி. ஜயசிங்க, தொழில் உறவுகள், மனித வலு அமைச்சினது சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.09.14 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

6. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. ஆர். பி. பிரேமதாச அவர்கள் 2009.09.22 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கடமையை நிறைவேற்றும் பணிப்பாளர் நாயகமாக.

7. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக திருமதி எஸ். ஜே. எம். எச். சீ. சமரகோன் சபரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.10.02 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

8. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள செல்வி ஐ. ரி. வீரசிங்க சுதேச வைத்திய அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.10.16 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

9. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திருமதி ஆர். கே. டீ. அல்விஸ் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.10.16 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

10. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. ஏ. ஆர். தேசப்பிரிய வாழ்க்கைத்தொழில், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலராளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.10.20 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

11. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இனை சேர்ந்த அலுவலராக உள்ள திரு. வஜிர கம்புறுகமுவ பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலராளர் பதவியில் கடமையாற்றுவதற்கு 2009.10.21 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை.

டீ. திசாநாயக்கா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2010, மார்ச் .

3-762/2

## மற்றைய நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 59

### இலங்கை நிர்வாக சேவை நியமனங்கள்

1. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திருமதி பி. எதிரிசிங்க அவர்கள் 2008.07.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தென்மாகாண கூட்டுறவு அலுவலர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக.

2. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திருமதி எஸ். டீ. பாடிகோராள அவர்கள் 2008.07.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தென் மாகாண சபையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளராக.

3. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திரு. ஆர். பீ. ஏ. விமலவீர அவர்கள் 2009.07.15 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சினது பணிப்பாளராக.

4. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திருமதி எச். ஏ. எச். பெரேரா அவர்கள் 2009.09.10 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சினது பணிப்பாளராக.

5. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திருமதி ஜே. எம். ரீ. ஜயசுந்தர அவர்கள் 2009.09.14 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சினது பணிப்பாளராக.

6. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திரு. எல். எச். திலகரத்ன அவர்கள் 2009.11.25 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பணிப்பாளராக.

7. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திரு. வீ. சண்முகம் அவர்கள் 2009.11.25 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தேர்தல் திணைக்களத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளராக

8. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I இல் உள்ள திரு. ஆர். எம். பி. எஸ். பி. ரட்ணாயக்கா அவர்கள் 2009.12.14 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை உடுநுவர பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக.

9. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திருமதி ஜே. டி. அமரதுங்ஹ அவர்கள் 2009.11.10 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சினது (வெளிநாட்டுறவுகள்) உதவிச் செயலாளராக.

10. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திருமதி டி. டீ. பத்திரணகே அவர்கள் 2009.12.04 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தென் மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் உதவிச் செயலாளராக.

11. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திருமதி ஜீ. இரத்நாயக்க அவர்கள் 2009.12.08 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை ஊவா மாகாண வீதி அபிவிருத்தி வீடமைப்பு நீர் வழங்கல் நுகர்வோர் விவகார கூட்டுறவு உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சின் உதவிச் செயலாளராக.

12. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. எஸ். அம்பஹதென்னே அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக.

13. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள செல்வி எச். ஏ.ஏ. கே. ஜராங்கனி அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை நீதி சட்டமறுசீரமைப்பு அமைச்சின் உதவிச் செயலாளராக.

14. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. ஆர். ஜீ. சீ. பீ. தினுஷான் அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை உள்ளக நிருவாக அமைச்சின் உதவிச் செயலாளராக.

15. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. ஆர். ஆர். ஏ. எஸ். கே. ரத்நாயக்கா அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக.

16. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. பி. ஆர். என். எச். ரத்நாயக்கா அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக.

17. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திருமதி ஜே. எஸ். ஏ. பள்ளியகுரு அவர்கள் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை நகர அபிவிருத்தி புனித நிலப்பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளராக.

18. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. என். டப். ஆரியரத்ன அவர்கள் 2010.02.02 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை பிரதம அமைச்சர் அலவலகத்தின் உதவிச் செயலாளராக.

19. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திருமதி எஸ். எம். சி. குணரட்ன அவர்கள் 2010.02.03 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை காணி நிர்ணய திணைக்களத்தில் உள்ள உரித்து நிர்ணயத்தின் உதவி ஆணையாளராக.

20. இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இல் உள்ள திரு. எச். எஸ். கே. ஜே. பண்டார அவர்கள் 2010.02.03 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் மேலும் கட்டளை பிறப்பிக்கும் வரை வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சில் உதவிச் செயலாளராக.

டீ. திசாநாயக்கா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2010 ..........

3-762/1

# அரசாங்க அறிவித்தல்கள்

## அறிவித்தல்

பீஆர்/1/4/10

2009, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் திருமதி கொலம்பகே பிறேமணி பெரேரா அவர்களை கொழும்பிலுள்ள சைப்பிரஸ் குடியரசின் கௌரவ கொன்சூலராக அங்கீகரிப்பதில் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் களிகூர்ந்துள்ளார்கள்.

சீ. ஆர். ஜயசிங்க,
செயலாளர்,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
'குடியரசுக் கட்டிடம்',
கொழும்பு 01,
08, மாச்சு 2010.

3-873

---

எனது இல.: பி. நொ. 11-2-09-11-2009-பக்-ஒழு.

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறவித்தல் (அத்தியாயம் 120)

கீழ் குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 01 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 03 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 04 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கிறது.

02. 2010.03.30 ஆந் திகதி தொடக்கம் 2010.04.14 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கண்டி காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

03. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்படவிருக்கும் ஏதேனும் விபரங்கள் தொடர்பான பதிவு சம்பந்தமான ஆட்சேபனையை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ

விரும்பின் அவை தொடர்பான குறைபாடுகளை அல்லது கோரிக்கைகளை செய்வோர் கீழே கையொப்பம் இடப்பட்டவரது பெயருக்கு எழுத்து மூலம் 2010.04.21 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகளை ஆவண ரீதியாக ஆதாரங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.

**அட்டவணை**

| காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கண்டி மாவட்டம் கண்டி காணிப் பதிவகத்தில் “A” பிரிவில் 95 ஆம் புத்தகத்தில் 221 ஆம் பக்கம் | மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், நகர, மாநகர சபை எல்லையில் வெவலபிட்டிய வீதியான லேடி கொட்டன்ஸ் வீதியில் அமைந்துள்ளதும் 0ஏ. 0றூட் 14.3 பேர்ச்சஸ் விசாலமுடைய வெவல்பிட்டிய எனும் பெயரையுடைய காணிக்கு 3 இல (பழைய இல. 1A) வரைபடத்தின் படி “ஒதுக்கிடம்” என்றழைக்கப்படும் காணித்துண்டின் எல்லைகள் :- | 1. பீ. மபலகம பிரசித்த நொத்தாரிசு அவர்களால் 1951.12.21 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப் பட்ட 3465ஆம் இலக்க மாற்று (Transfer ) உறுதி |
| | வடக்கு : திரு. கிறீனின் ஆதனமாகிய வீடும் இல. 1 மைதானமும்;<br>கிழக்கு : திருமதி ஸ்ரெய்ன்ரனின் வீடும் இல. 2 மைதானமும், வூட்லான்ஸ்க்கான வீதியும் ;<br>தெற்கு : லேடி கொட்டன்ஸ் வீதி (வெவல்பிட்டிய)<br>மேற்கு : திரு. கிறீனின் ஆதனமாகிய வீடும் இல. 1 தோட்டமும். | 2. என். விமலசேன பிரசித்த நொத்தாரிசு அவர்களால் 1951.12.21 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2096 ஆம் இலக்க ஈட்டு (Mortage) உறுதி |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

3-896

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

“மண்டலபுர தியா கம்ஹல” என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் நெலுவவில் தொழில் கொண்டு நடாத்துகின்ற தசிலிகே சுனில் சேனாநாயக்கா என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். திஸ்குமார என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டும் 2005, சனவரி 12 ஆந் திகதிய 646 ஆம், 647 ஆம் இலக்கங்களைக் கொண்ட முதனிலை ஈட்டுமுறிகளின்மீதும் 2005, நவெம்பர் 2 ஆந் திகதிய 982 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற் கூறப்பட்ட 646 ஆம், 647 ஆம் மற்றும் 982 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 1,66,77,243.24) கொண்ட தொகையும் 2009, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்தாறு ரூபா (ரூ. 1,29,51,766) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும் அத்துடன் தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒரு ரூபா (ரூ. 92,891) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் ஏழு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஒரு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 7,39,601.99) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு

ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு நான்கு சதவீத (4%) வட்டியும் சொல்லப்பட்ட தசிலிகே சுனில் சேனாநாயக்கா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் எந்திரத்தொகுதியையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 1,66,77,243.24) கொண்ட தொகையை, 2009, திசெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்தாறு ரூபா (ரூ. 1,29,51,766) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியுடன் அத்துடன் தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒரு ரூபா (ரூ. 92,891) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வடடியுடன், ஏழு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஒரு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 7,39,601.99) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதியில் தொடங்குகின்ற மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு நான்கு சதவீத (4%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 646 ஆம், 647 ஆம் மற்றும் 982 ஆம் இலக்கங்களைக் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் எந்திரத்தொகுதியும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**982 ஆம் இலக்க முறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள ஹினிதும் பத்து (வடக்கின்) உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எம்பலகெதர கிராம அலுவலர் பிரிவிலுள்ள எம்பலகெதரவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மண், பயிர்கள், இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரசபையில் பீ231, எஸ்6, எப்123 என்பதாகக் பதிவு செய்யப்பட்ட இறப்பர் தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இந்தொலஹேன மற்றும் ஹிவத்தவில கந்த எனவழைக்கப்படும் காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட இ. கி. வ. இல. 474 இல் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 235 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 235 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டங்கள் 111, 196, 200 மற்றும் 222 ; கிழக்கில் : காணித்துண்டங்கள் 164, 168, 196 மற்றும் 234 ; தெற்கில் : காணித்துண்டம் 196 மற்றும் ; மேற்கில் : காணித்துண்டங்கள் 111, 196 மற்றும் 222; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட இ. கி. வரைபடம் இல. 479 தின்படி பதின்மூன்று ஏக்கர் ஒரு றூட் பத்தொன்பது பேர்ச்சஸ்கள் (13ஏ. 1றூ. 19பே.) கொண்டுள்ளதுடன், காலிக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

அண்மைக்காலத்திய நிலஅளவை வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது :-

தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள ஹினிதும் பத்து (வடக்கின்) எம்பலகெதரவில் அமைந்துள்ளதும், இந்தொலஹேன மற்றும் ஹிவத்தவில எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீபீ ஸ்ரீபன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.08.26 ஆந் திகதிய 451 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டங்கள் 111, 196, 200, 222 மற்றும் பெருவீதி ; கிழக்கில் : காணித்துண்டங்கள் 164, 168, 196 மற்றும் 234 ; தெற்கில் : காணித்துண்டம் 196 மற்றும் ; மேற்கில் : காணித்துண்டங்கள் 111, 196 மற்றும் 222; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட வரைபடம் இல. 451 தின்படி பதின்மூன்று ஏக்கர் ஒரு றூட் பத்தொன்பது பேர்ச்சஸ்கள் (13ஏ. 1றூ. 19பே.) கொண்டுள்ளது.

அதன்கண் கூறப்பட்ட அப்பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் எல்லாவற்றினதும் முழுமையும் :-

| அளவு | விவரணம் |
|---|---|
| 05 | சீசீசீ தேயிலை உருளி |
| 02 | உருளி தடுப்பான் |
| 01 | வெப்பமூட்டி |
| 02 | தேயிலை உலர்த்தி |
| 01 | 3ரீ தண்டு பிழிப்பான் |
| 01 | தும்புப் பாய் |
| 01 | உறிஞ்சு புடைகருவி |
| 02 | மிட்டில்ஸ்டோன் அரிப்பான் |
| 03 | மிச்சி அரிப்பான் |
| 01 | சொட்டா அரிப்பான் |
| 01 | டெரி நிப்பர் |
| 01 | இரட்டைப் பொதியிடுகருவி |
| 01 | செனவெக் தேயிலை நிறம் தனிவேறாக்கி |
| 07 | விதரிங் ட்ரல் |

**646 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

| விவரணம் | அளவு |
|---|---|
| 4 அடி சிர்ரிக்கோ தேயிலை உலர்த்தி | 01 |

நெலுவ, எம்பலகெதர, தொட்டகொடவிலுள்ள வளவுகளிலும் அதன்மீதும் இப்போது கிடக்கின்ற அத்துடன் ஈடுவைத்தவர் இப்போது தொழில் நடாத்துகின்ற அத்துடன் இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் தொழில் கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் காலத்துக்குக் காலம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய வேறெவையேனும் கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அல்லது சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின் மீதும் உள்ள உதிரிப்பாகங்களுடனும் துணைப்பொருட்களுடனும் கருவிகளுடனும், அத்துடன் இதன் பின்னர் காலத்துக்குக்காலமும் எல்லா நேரங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளினுள் களஞ்சியங்களினுள் மற்றும் வளவுகளினுட் கொண்டுவரப்பட வேண்டிய அல்லது கொண்டுவரப்படக்கூடிய வைத்திருக்கப்பட வேண்டிய அல்லது வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்க வேண்டிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின் மீதும் ஈடுவைத்தவர் இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் அதன் தொழிலை அல்லது வியாபாரத்தை அப்புறப்படுத்தவேண்டிய அல்லது அப்புறப்படுத்தக்கூடிய அல்லது அதன் தொழிலை அல்லது வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவேண்டிய அல்லது கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித் தொகுதியை, எந்திரத்தொகுதியை சாதனத்தை உதிரிப்பாகங்களை துணைப்பொருட்களை அத்துடன் கருவிகளை வைத்திருக்க வேண்டிய அல்லது வைத்திருக்கக்கூடிய வேறேதேனும் தொழிலிடத்திலும் அல்லது வேறெவையேனும் தொழிலிடங்களிலும் சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை மற்றும் சாதனத்தைக் காலத்துக்குக் காலம் மாற்றீடு செய்ய வேண்டிய அல்லது மாற்றீடு செய்யக்கூடிய எத்தகையதுமான அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் என்பவற்றிலும் முழுமையுடனும் சேர்த்து.

| வேறு பிரித்துக் காட்டும் இலக்கம் | விவரணம் வகை மாதிரி, குதிரை விசை முதலியன. | அடிச்சட்டக இலக்கம் | என்ஜின் இலக்கம் | வைத்திருக் கப்பட்ட இடம் |
|---|---|---|---|---|
| 227-7615 | இசுசு மோட்டார் லொறி | NKR58L-7127963 | 4BE1-340450 | தொட்டகொட, எம்பலகெதர, நெலுவ. |

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-755

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2009.12.10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"திரு. எஸ். டீ. ஏ. ராஜபக்ஷ (AAL & NP) அத்தாட்சிப்படுத்திய 1999.11.03 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 10104 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. பீ. டி. ஈ. பெர்ணான்டோ அத்தாட்சிப்படுத்திய 2007.02.27 ஆந் திகதியிட்ட முறி இல. 7648 மற்றும் பிரசித்த நொத் தாரிசு எஸ். ஆர். தி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2008.03.03 ஆந் திகதியிட்ட முறி இல. 3194 ஆகியவற்றின் பேரில் இல. 363, பிரதான வீதி, நீர்கொழும்பு என்னும் முகவரியைச் சேர்ந்த சேன மற்றும் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் பணிப்பாளர்களாகிய நீர்கொழும்பு பிரதான வீதி, இல. 363 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. லொகுபாலசூரிய அப்புஹாமிலாகே நந்தசேன பண்டார, திருமதி லொகுபாலசூரிய அப்புஹாமிலாகே சீதா ஹெட்டி ஆரச்சி மற்றும் திருமதி ரத்நாயக்கா முதியான் சேலாகே நந்தாவதி ஆகியோ ரிடமிருந்து முதலும் 2009.10.16 வரை வட்டியும் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூற் றொரு ரூபா இருபத்து நான்கு சதங்களும் (ரூ. 1,68,30,591.24) அத்துடன் ஒரு கோடி ரூபாவிற்கு (ரூ. 1,00,00,000) மீது ஆண்டுக்கு 25% வீதத்திலும் நாற்பத்து இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) வங்கி உத்தரவாதத்துக்கு ஆண்டுக்கு இருபத்தொன்பது (29%) வீதத்திலும் 2009.10.17 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 10104, 7648 மற்றும் 3194 ஆகியவற் றின் மீது வருமதியாகவுள்ள ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து முப்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றொரு ரூபா இருபத்து நான்கு சதங்களும் (ரூ. 1,68,30,591.24) அத்துடன் 2009.10.17 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக் கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்னுவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்குமமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 உம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடு வதற்கு இலங்கை வங்கி நீர்கொழும்பு பஸார் கிளை முகாமையாள ருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**விற்பனைக்குரிய ஆதனம்**

*முதலாவது அட்டவணை*

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டிய டீ. ஆர். ஓ. பிரிவினுள் அக்கறைப்பற்றுவில் சேன தொடுவயில் அமைந்த ''சேனதொடுவ'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். கிருஷ்ணசாமி தயாரித்த 1976, சனவரி 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 198 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வீ. சீ. ரோட்டும் ; கிழக்கில் : P. P. இல. 586 இல் துண்டுகள் 2 மற்றும் 1

*உம் காணிச்சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; தெற்கில் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும்; மேற்கில் : கடற்கரையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 198 இன்படி முப்பத்தைந்து ஏக்கர் இரண்டு றூட் (35ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 33/259 இல் பதிவு செய்யப்பட்டது.*

*துண்டு 1 என அடையாளமிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித் துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயாரித்த 08.10.2006 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 354/06 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-*

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேன தொடுவ என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : ரோட் (பி. ச.) உம் ; கிழக்கில் : தொடுவ எலயும். P. P. Pu 586 இல் துண்டு 1 உம் ; தெற்கில் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; மேற்கில்: கடல் நெடுகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறித்த வரைபடம் இல. 354/06 இன்படி முப்பத்தைந்து ஏக்கர் இரண்டு றூட் (35ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும்.*

### ***இரண்டாவது அட்டவணை***

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேனதொடுவ என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். கிருஷ்ணசாமி தயாரித்த 1976, சனவரி 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 199 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : தொடுவாவயும் ; கிழக்கில் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; தெற்கில் : காலஞ்சென்ற பீ. எம். ஏ. அபேசேகரவின் காணியும் ; மேற்கில்: தொடுவாவயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 199 இன்படி ஐந்து ஏக்கர் ஒரு றூட் (5ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது புத்தளம் காணிப்பதிவகத்தில் Q 33/250 இல் பதிவு செய்யப்பட்டது.*

*துண்டு 2 என அடையாளமிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயாரித்த 08.10.2006 ஆந் திகதியிட்ட மிகவும் அண்மைய அளவை வரைபடம் இல. 354/06A இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-*

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேன தொடுவ என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06/A இல் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு வடக்கில் : தொடுவ எலயும் ; கிழக்கில் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; தெற்கில் : நந்தசேன பண்டார வின் காணியும் ; மேற்கில்: தொடுவ எலயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06/A இன்படி ஐந்து ஏக்கர் ஒரு றூட் (5ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந் துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும்.*

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேனதொடுவ என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். கிருஷ்ணசாமி தயாரித்த 1976, சனவரி 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 198 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப் பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வீ. சீ. ரோட்டும் ; கிழக்கில் : P. P. 586 இல் துண்டு 1 உம் ; தெற்கில் : தொடுவயும் ; மேற்கில் : தொடுவயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 198இன் படி பன்னிரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்திரண்டு (12ஏ. 1றூ. 22பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது புத்தளம் காணிப்பதிவகத்தில் Q 33/258 இல் பதிவு செய்யப்பட்டது.*

*துண்டு 2 என அடையாளமிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித் துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயாரித்த 08.10.2006 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 354/06 இன்படி பின்வரும் விதத்தில் விபரிக்கப்பட்டுள்ளது:-*

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேன தொடுவ என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06 இல் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : ரோட்டும் (பி. ச.) ; கிழக்கில் : P. P. Pu. 586 இல் துண்டு 1 உம் ; தெற்கில் : தொடுவ எலயும் ; மேற்கு : தொடுவ எலயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06 இன்படி பன்னிரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்திரண்டு பேர்ச்சஸ்கள் (12ஏ. 1றூ. 22பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும்.*

### ***மூன்றாவது அட்டவணை***

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேனதொடுவ என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். கிருஷ்ணம்சாமி தயாரித்த 1976, சனவரி 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 199 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வீ. சீ. ரோட்டும் ; கிழக்கில் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; தெற்கில் : தொடுவயும்; மேற்கில் : காலஞ்சென்ற திருமதி பீ எம். ஏ. அபேசேகரவுக்குச் சொந்தமான காணியும் எல்லைகளாகக் கொண்டு இருபத்தைந்து ஏக்கர் இரண்டு றூட் முப்பது பேர்ச்சஸ்கள் (25ஏ. 2றூ. 30பே.) விஸ்தீரணமு டைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது புத்தளம் காணிப்பதிவகத்தில் Q 33/251 இல் பதிவு செய்யப்பட்டது.*

*துண்டு 1 என அடையாளமிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயா ரித்த 08.10.2006 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 354/06/A இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-*

*மேற்குறிப்பிட்ட சேன தொடுவயில் அமைந்த சேன தொடுவ என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06/A இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு வடக்கில் : ரோட்டும் (பி. சபை) ; கிழக்கில் : தொடுவ எலயும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ஒப்படைத்த காணியும் ; தெற்கில் : தொடுவ எலயும் ; மேற்கில்: நந்தசேன பண்டாரவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 354/06/A இன் படி இருபத்தைந்து ஏக்கர் இரண்டு றூட் முப்பது பேர்ச்சஸ்கள் (25ஏ. 2றூ. 30பே.) காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும்.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*ஜீ. எச். எஸ். பெர்ணாண்டோ,*
*கிளை முகாமையாளர்.*

*இலங்கை வங்கி*
*நீர்கொழும்பு பஸார் கிளை,*

*3-887*

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. (பதிவு இலக்கம் PQ116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.*

கணக்கு இலக்கம் : 1270001902
கடன் கணக்கு இலக்கம் : 251005, 382258, 476579 மற்றும் 350531 - அப்துல் ஹசன் மொகமட் ராசிக் அண்வர்

23.10.2009 ஆந் தேதியன்று கூடிய கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த அப்துல் ஹசன் மொகமட் ராசிக் அண்வர் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 29.07.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2012, 2.08.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2515 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகேயின் 10.08.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 3276 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், இவ்வட்டவணையில் 1வது விபரிக்கப்பட்ட காணியை சம்பந்தமாக.

மற்றும் கடன் எடுத்த அப்துல் ஹசன் மொகமட் ராசிக் அண்வர் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு இவ் அட்டவணையில் 2 ஆவது சொல்லப்பட்ட காணியை சம்பந்தமாக 8.11.2000 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5578 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,

மேலும் கடன் எடுத்த இவ்வட்டவணையில் 3 ஆவது சொல்லப்பட்ட காணி சம்பந்தமாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். சி. பி. ஏரத்தின் 21.02.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 767 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,

அத்துடன் மேற்படி முறி மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ.க்கு 25.09.2009 ஆந் திகதிவரை ரூபா 3,36,35,243.23 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 வது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் உள்ள அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கம் 2012, 2515, 3276, 5578 மறறும் 767 பிரகாரம் இவ் அட்டவணையில் 1வது, 2 ஆவது மற்றும் 3 வது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 3,36,35,243.23 பணத்தொகையுடன் 26.09.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 1,04,91,068.73 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 29% சத வட்டியுடன், 83,59,700 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 23% சதவட்டியுடன் 1,19,04,821.09 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 17% சதவட்டியுடன் மேலும் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 உரிமம்பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனவு செய்யப்பட்ட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டது."

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோரளையில் தெகிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லையில் பாமண்கட கிராமத்தில் அமைந்துள்ள துட்டகமுனு வீதி, இலக்கம் 36, கட்டிடம் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஜீ. பி. தொடன்வல நிலஅளவையாளரின் 21.01.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4658 இல் காண்பிக்கப்பட்ட தெல்காவத்த என்ற காணியின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 1 காணியின் எல்லைகள் - வடக்கு : துட்டகமுன வீதி இலக்கம் 32/1, 32 மற்றும் 32/1/2 கட்டிடங்கள் ; கிழக்கு: துட்டகமுனு வீதி; தெற்கு: ரோட் (வரைபடம் இல. 941 லொட் 4C) ; மேற்கு : துட்டகமுனு வீதி இலக்கம் 36/2 கட்டிடம் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0று. 12.57பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 4658 படி இக்காணி தெல்கண்த- நுகேகொடை காணிப் பதிவகத்தில் M 2870/32 இல் பதிவு செய்யப்பட்டது.

கீழ்க்காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன் ,

மேற்படி பாமன்கட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எப். பி. விஜேசேகரவின் 12.10.1968 வரைபடம் இலக்கம் 819 இல் காண்பிக்கப்பட்ட தெல்காவத்த என்ற காணியின் லொட் 4C (10 அடி ரோட்) இக்காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபட இலக்கம் 819. லொட் 4A1 மற்றும் 4A2 ; கிழக்கு : துட்டகமுனு வீதி ; தெற்கு : கட்டிடம் இலக்கம் 38 துட்டகமுனு வீதி சங்கமித்தா பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமானது ; மேற்கு: நிலஅளவையாளர் ஐ. டபிள்யூ. டபிள்யூ. இந்ததிஸ்ஸவின் 26.08.1962 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2357 இல் லொட் 4B இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0று. 05பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 819 படி இக்காணி கல்கிஸ்ஸ காணிப் பதிவகத்தில் M 2151/70 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், நான்கு கிரவுட்ஸ் மற்றும் மாநகர சபை எல்லையில் காலி பசார் முன்பு 98 தற்சமயம் மாநகர சபை கட்டிடம் இலக்கம் 126 பிரதான வீதி, கட்டிடம் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஏ. ஆர். வீரசூரியவின் 2.11.1994 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 792 இல் காண்பிக்கப்பட்ட லொட் என்ற காணியின் எல்லைகள் - வடகிழக்கு : லொட் A2 ; தென்கிழக்கு : கட்டிடங்கள் இலக்கங்கள் 9 மற்றும் 83, கடற்கரை ரோட்; தென்கிழக்கு : கட்டிடம் இலக்கம் 124, பிரதான வீதி ; வடமேற்கு : பிரதான வீதி. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0று. 1.20பே.) இக் காணி காலி காணிப்பதிவகத்தில் A 491/73 இல் பதிவு செய்யப்பட்டது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோரளையில் கொழும்பு மாநகர சபை எல்லையில் வெள்ளவத்தை கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம் 56 வெவசட் பிளேஸ், கட்டிடம் அமைந்துள்ள மாவெல்லவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் கே. கே. திருநாவுக்கரசு 17.01.1968 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 587 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 B காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் E1B மற்றும் 2 பெர்னாந்து ரோட் கட்டிடங்கள் இலக்கங்கள் 53 மற்றம் 51 ; கிழக்கு : இக்காணியின் லொட் 3A ; தெற்கு : வெவசட் பிளேஸ் ; மேற்கு : லொட் 3 வெவசட் பிளேஸ் கட்டிடம் இலக்கம் 58 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0று. 6.12பே.) இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில வெள்ளவத்தைத் 158/202 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய லொட் 1 தற்சமயம் செய்யப்பட்ட வரைபடம் மூலம் பின்வருமாறு சொல்லப்பட்டது.

மேற்படி வெள்ளவத்தை தெற்கு லொட் இலக்கம் 47 இல் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம் 56, வெவசட் பிளேஸ் கட்டிடம் அமைந்துள்ள மாவெல்லவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் என். பாலசுப்பிரமணியம் 07.02.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 355 இல் காண்பிக்கப்பட்ட லொட் 7560 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 2 மற்றும் லொட் 4015 கட்டிடங்கள் இலக்கங்கள் 53 மற்றும் 51A பெர்னாந்து ரோட் ; கிழக்கு : வெவசட் பிளேஸ் கட்டிடம் இலக்கம் 54 இல் அமைந்துள்ள லொட் 3A தெற்கு : வெவசட் பிளேஸ் ; மேற்கு : லொட் 2. கட்டிடம்இலக்கம் 58 வெவசட் பிளேஸ் இக்காணியின் விஸ்தீணம் (0ஏ. 0று. 6.01பே.).

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

3-839

---

## கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், பின்வரும் தீர்மானமானது, (இதற்குப் பின்னர் UBC எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நீர்கொழும்பு, கிம்புலாபிட்டிய வீதி, 240D ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தம்மிட்ட கங்கானமலாகே தொன் திலக் சமரசேகர மற்றும் ஜுன் வென்டர் சமரசேகர (இதற்குப் பின்னர் "கடப்பாட்டாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்போர் தமது நடப்புக் கணக்கில் கடன்கள், முற்பணங்கள், மேலதிகப் பற்றுக்கள் என்ற வகையாகக் காலத்துக்குக் காலம் வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப்பற்றுக்கள் வசதிகளின் கணக்கால் கொழும்பு யூனியன் வங்கிக்கு வருமதியான இருபது இலட்சம் ரூபாவையும் (ரூ. 20,00,000), அதன்மீதான வட்டியையும் கொடுப்பனவு செய்வதற்காக சொல்லப்பட்ட ஈடுவைப்பவரால் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பீ. தம்மிக சில்வா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 972 ஆம் இலக்க 2007.04.25 ஆந் திகதிய ஈட்டுமுறியினால் இதன்கீழ் அட்டவணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடையானஞ் செய்துள்ளனராதலாலும், சொல்லப்படட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப் பற்று வசதிகளின் கணக்கால் 2009.10.31 ஆந் திகதிக்கு பதின்நான்கு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 14,64,339.45) கொண்ட தொகையும், 2009, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 29% வீதத்தில் வட்டியும் சேர்த்து மேற்குறித்த கொழும்பு யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாட்டாளர்களிடமிருந்து வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் இருக்கின்றதாதலாலும்,

அத்துடன் யூனியன் வங்கியின் (யூபிசி) பணிப்பாளர் சபை, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டும், ஈடுவைப்பவர் மேற்கூறப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப் பற்றாகப் பெறப்பட்ட மீதி என்பவற்றின் கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளாரெனத் திருப்திப்பட்டும், மேற்கூறிய பதின்நான்கு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 14,64,339.45) கொண்ட தொகையையும் 2009, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 29% வீதத்தில் அதன்மீதான வட்டியையும் அறவீடு செய்து கொள்வதற்கும் சொல்லப்பட்ட 972 ஆம் இலக்க ஈட்டுமுறியினதும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி யூனியன் வங்கிக்கு அறவிடுவதற்கு உரித்துடையதாகவுள்ள வேறெல்லாத் தொகைகளையும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 972 ஆம் இலக்க ஈட்டுமுறியின் நியதிகளின்படி அதற்கமைவாகவும் இதன் கீழ் அட்டவணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் பிரகாரம் உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களுக்கு அதிகாரமளிக்கும்படி அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பிரிவின் அளுத்குரு கோரளே துனுகஹபத்துவ கதிரான வடக்கில் அமைந்துள்ள உளுஅம்பலமவத்தே பகுதி என்னும் காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குரூஸ் தாபரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 5007/1988 ஆம் இலக்க 1988, சனவரி 18 ஆந் திகதிய வரைபடத்தில் பிரிக்கப்பட்ட காணித்துண்டம் 1 என்னும் காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே : இக்காணியின் எஸ். கே. எஸ். குணசேகரவின் காணித்துண்டும் ; கிழக்கே : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ஜீ. அமரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1983.07.30 ஆந் திகதிய 4204 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டம் 7 ; தெற்கே : காணித்துண்டம் 3 (12 அடி அகலமான பாதைக்காக ஒதுக்கப்பட்ட பகுதி) மற்றும் காணித்துண்டம் 2 ; மேற்கே: மேற்குறித்த 4204 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டம் 1 என்னும் எல்லைகளுக்குட்பட்ட ஒரு றூட் முப்பத்திரண்டு தசம் ஐந்து பூச்சியம் விசாலமான (0ஏ. 1றூ. 32.50பே.) அதாவது 0.18337 ஹெக்டேயர் விசாலமான காணித்துண்டு ஆகும். நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E582/285 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்குறித்த காணிக்கு கீழே விபரிக்கப்படும் காணிகளில் ஒதுக்கப்பட்ட பாதையுரிமையுடனும் அணுகு வீதி வழிகளின் மீதான உரிமைகளுடனும் சேர்த்து.

(அ) மேற்குறித்த கதிரான வடக்கில் அமைந்துள்ள உளுஅம்பலம வத்தே பகுதி என்னும் காணிக்கு தயாரிக்கப்பட்ட மேற்குறித்த 5007/1988 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் 12 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கப்பட்ட காணித் துண்டம் 3 என்னும் பிரிக்கப்பட்ட காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே : காணித்துண்டம் 1 ; கிழக்கே : 4204 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டம் 7 ; தெற்கே : காணித்துண்டம் 4 ; மேற்கே : காணித்துண்டம் 2 என்னும்

எல்லைகளுக்குட்பட்ட ஆறு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றா. 6.60பே.) விசாலமான காணித்துண்டு. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E582/286 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறித்த கதிரான வடக்கில் அமைந்துள்ள உளுஅம்பலம வத்தே பகுதி என்னும் காணிக்கு தயாரிக்கப்பட்ட மேற்குறித்த 5007/1988 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் 14 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கப்பட்ட காணித்துண்டம் 4 என்னும் பிரிக்கப்பட்ட காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே : காணித்துண்டம் 2 மற்றும் 3 ; கிழக்கே : 4204 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டம் 7 ; தெற்கே : 4204 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் 6 ; மேற்கே : காணித்துண்டம் 4 என்னும் எல்லைகளுக்குட்பட்ட மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றா. 3.20பே.) விசாலமான காணித்துண்டு. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E582/287 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்குறித்த கதிரான வடக்கில் அமைந்துள்ள உளுஅம்பலம வத்த பகுதி என்னும் காணிக்கு தயாரிக்கப்பட்ட மேற்குறித்த 5007/1988 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணித்துண்டம் 5 என்னும் பிரிக்கப்பட்ட காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே : காணித்துண்டம் 2; கிழக்கே மற்றும் தெற்கே: காணித்துண்டம் 5 ; மேற்கே : காணித்துண்டம் 2 என்னும் எல்லைகளுக்குட்பட்ட பூச்சியம் தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றா. 0.25பே.) விசாலமான காணித்துண்டு. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E562/288 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மேற்குறித்த கதிரான வடக்கில் அமைந்துள்ள உளுஅம்பலம வத்த பகுதி என்னும் காணிக்கு தயாரிக்கப்பட்ட மேற்குறித்த 4204 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணித்துண்டம் 5 என்னும் பிரிக்கப்பட்ட காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே : காணித்துண்டம் 2 மற்றும் 4 ; கிழக்கே : காணித்துண்டம் 5 ; தெற்கே: பெருந்தெரு; மேற்கே : காணித்துண்டம் 4 என்னும் எல்லைகளுக்குட்பட்ட பதிநான்கு தசம் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றா. 14.4பே.) விசாலமான காணித்துண்டு. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E582/185 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டீ. என். எஸ். கண்ணங்கர,
சபைச் செயலாளர்.

3- 892

---

## கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

2010, மாசி 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், பின்வரும் தீர்மானம் கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டின் (யூ. பி. சி.) பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''இதற்குப்பின்னர் ''ஈடுவைப்பவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவரும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், குருநாகல், கொழும்பு வீதி, 200 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவருமான மங்களசேன விஜித பண்டார ரணராஜ என்பவர் தமது நடப்புக் கணக்கில் கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் என்ற வகையாகக் காலத்துக்குக்காலம் வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுள்ளதாலும், பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. வந்துராகல என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூலை 04 ஆந் திகதிய 12596 ஆம் இலக்க ஈட்டுமுறியையும், 2006, செத்தெம்பர் 26 ஆந் தகிதிய 13582 ஆம் இலக்க ஈட்டுமுறியையும் ஈடுவைப்பவர் எழுதி நிறைவேற்றியுள்ளாராத லாலும், சொல்லப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றின் கணக்கால் (இதற்குப் பின்னர் ''யூ. பி. சீ.'' எனக் குறிப்பிடப்படும்) கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட் டுக்கு வருமதியான பதினேழு இலட்சம் ரூபாவையும் (ரூ. 17,00,000), 3,00,000 ரூபாவையும் அவற்றின் மீதான வட்டியையும் கொடுப்பனவு செய்வதற்கான பிணைப்பொறுப்பு என்றவகையாக இதற்கான அட்டவணையில் இன்னமும் முழுமையாக விவரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடைமானம் வைத்தள்ளாராதலராலும், இன்றைய திகதியிலுள்ளவாறாக இருபத்துமூன்று இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நாநூற்று எண்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 23,88,480.25) கொண்ட பணத்தொகையும், 2007, யூலை 03 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 34% வட்டியும், மேற்கூறப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப்பற்றுக் கள் என்பவற்றின் கணக்கால், (யூ. பி. சீ.) வங்கிக்குச் சொல்லப்பட்ட ஈடுவைப்பவரிடமிருந்து வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் இருக்கின்றதாதலாலும்,

கொழும்பு யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபை, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயலாற்றியும், ஈடுவைப்பவர் மேற்கூறப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப்பற்றாகப் பெறப்பட்ட மீதி என்பவற்றின் கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளாரெனத் திருப்திப்பட்டும், சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் நியதிகளின்படி உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளரான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களுக்கு, சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் நியதிகளின்படி, மேற்கூறப்பட்ட 12596 ஆம், 13582 ஆம் இலக்கங்களைக் கொண்டவையும், இதற்கான அட்டவணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்பட்டவையுமான ஈட்டுமுறி களின் கீழும் அவற்றின் பயனைக் கொண்டும் (யூ. பி. சீ.) வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை, 23,88,480.25 23 உம் 2007, யூலை 03 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 34 சதவீதத்தில் அதன்மீதான வட்டியையும், சொல்லப்பட்ட 12596 ஆம், 13582 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீதும் செல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி (யூ. பி. சீ.) அறவிடுவதற்கு உரித்துடையதாகவுள்ள மற்றெல்லாத் தொகைகளையும் அறவிடுவதற்காகப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும்படி அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் திரகநத்ஹயே எகொட கோறளை வியூடவில்லி ஹத்பத்துவில் பொயகனே கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ்.

கலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989.06.29 ஆந் திகதி 2622 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 4சீ எனக் குறித்துக்காட்டப்பட்டதும், (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.11.24 ஆந் திகதி உட்பிரிவு), பொயகனே வளவ்வே வத்த எனவழைக்கப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு 4சீ சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது - வடகிழக்கில் : வீதிக்கான ஒதுக்காகவுள்ள காணித்துண்டு 4ஈ ; தென்கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 4டீ ; தென்மேற்கு : 1015 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 02 ; வடமேற்கு: சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 4பீ பரப்பளவில் இது. பொதுவான பாதையுரிமையாகச் சொல்லப்பட்ட வரைபடத்தில் அடையாளமிடப்பட்ட வீதி வழிகளைப் பயன்படுத்துவதற்கும் பேணுவதற்குமான உரிமையுடன் சேர்த்து. அதன்மீதுள்ளவையும் அதனுடன் இணைந்துள்ளவையுமான மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் முப்பத்தெட்டுப் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 38பே.) கொண்டுள்ளதுடன். குருநாகல் காணிப்பதிவகத்தில் ஏ 1414/239 என்ற உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

எஸ். டீ. என். எஸ். கண்ணங்கர,
சபைச் செயலாளர்.

3- 893

---

### மக்கள் வங்கி - -காலி கோட்டைக் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 26.10.2007 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''காலியைச் சேர்ந்த பீரசித்த நொத்தாரிசு எம். ஜீ. சீ. அரோசினியால் அத்தாட்சிப்படுத்திய 2005.03.30 ஆந் திகதி 192 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் ஹேவாவஸம் கமகே பத்மலால் என்பவர் தவணை தவறியுள்ளார் என்பதால் இப்பொழுது மேற்படி முறியின் மீது இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து நூறு ரூபா (ரூ. 2,30,100) மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2005.08.31 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு (18.25%) இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து நூறு ரூபா (ரூ. 2,30,100) மீது ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தை அதன் பின்னர் கொடுப்பனவு கள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றை கழித்து இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து நூறு ரூபா (ரூ. 2,30,100) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த என்பவரால் 192 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி பெரும் பகுதிக்குள் நாராவெலையில் அமைந்துள்ள காஸில் ஹீல் வதுயாய என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஸீ. த. எஸ். குணதிலக்க என்பவரால் 1999.12.29 ஆந்திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2788 வரைபடத்தின் பிரகாரம் வேறுபடுத்தப்பட்ட இலக்கம் இரண்டாம் துண்டுக்கு எல்லைகளாக - வடக்கு : இலக்கம் 1 ஆம் துண்டும் ; கிழக்குக்கு : வீதியும் (வதுரம்பையில் இருந்து காலிக்கு) ; தெற்கிற்கு : நந்தனி மங்கலிக்காவுடைய காணி (வரைபட இலக்கம் 247ஏ இல் காண்பிக்கப்பட்ட இலக்கம் 3 இல், எஞ்சிய பகுதி); மேற்கிற்கு : இலக்கம் 4 ஆம் துண்டு என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) அளவுடைய காணியும் அதில் உள்ள கட்டடங்களும் மரம், பயிர்கள் மற்றும் அனைத்தையும் ஆகும். இக்காணி காலி காணிப் பதிவகத்தில் இலக்கம் பீ (B) 179/119 கீழ்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட இலக்கம் 2788 வரைபடத்தில் வீதியாக குறித்துக்காட்டும் நிலத்தை ஒரு வீதியாக பயன்படுத்தும் உரிமையும் அதன் மேலாகவும் கீழாகவும் நீர்க் குழாய்கள் பரிமாற்றம் செய்யவும் மின்சாரக் கம்பிகளை அமைக்கவும் தொலைபேசிக் கம்பிகளை அமைக்கவும் உரிமைகள் உண்டு.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

3-900

---

### கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி 26 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், பின்வரும் தீர்மானமானது, (இதற்குப் பின்னர் "யூ. பீ. சீ." எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், கட்டான கிறிஉல்ல வீதி, 3A ஆம் இலக்கத்தைச் சேர்ந்த லின்தொட்டகே

அசேல கிரிஷாந்த செபஸ்தியன் பெர்னாந்து (இதற்குப் பின்னர் ''ஈடுவைப்பவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்பவர் அவரின் நடப்புக் கணக்கில், கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப்பற்று வசதிகளின் கணக்கால் யூ. பீ. சீ. வங்கிக்கு வருமதியான பதினைந்து இலட்சம் ரூபாவையும் (ரூ. 15,00,000) அதன்மீதான வட்டியையும் கொடுப்பனவு செய்வதற்காக சொல்லப்பட்ட ஈடுவைப்பவர் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கியூ. ரீ. திசேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.12.06 ஆந் திகதிய 5917 ஆம் இலக்க முதனிலை ஈட்டு முறியை நிறைவேற்றி இதன் கீழ் அட்டவணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்பட்ட ஆதனத்தை பிணைப்பொறுப்பு என்றவகையில் ஈடுவைத்த அடைமானஞ் செய்தலும், ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) தொகையை செலுத்துவதற்காக சொல்லப்பட்ட ஈடுவைப்பவரால் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எல். பீ. தம்மிக சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.10.18 ஆந் திகதிய 1135 ஆம் இலக்க இரண்டாம் ஈட்டுமுறியின் மூலம் இதன் கீழ் அட்டவணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்பட்ட பிணைப்பொறுப்பு என்ற வகையில் ஈடுவைத்து அடைமானஞ் செய்யப்பட்டுள்ளராதலாலும் சொல்லப்பட்ட கடன்கள், முற்பணங் கள் மற்றும் மேலதிகப்பற்றுக்கள் என்ற வகையில் 2009.10.31 ஆந் திகதியில் பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்தொன்பது இருபத்தேழு (ரூ.14,97,349.27) கொண்ட காலக்கடன் மீதான நிலுவைத் தொகையையும் மற்றும் நான்கு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து நாநூற்று எண்பத்தாறு ரூபா முப்பது சதம் (ரூ. 4,47,486.30) கொண்ட நிலுவை மேலதிகப் பற்றுத் தொகையையும் கொண்ட பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 19,44,835.57) தொகையையும் மற்றும் 2009, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றக்கு 29% வீதத்தில் அதன் மீதான வட்டியினைச் சேர்த்து சொல்லப்பட்ட யூ. பீ. சீ. வங்கிக்கு சொல்லப்பட்ட ஈடுவைப்பவரிடமிருந்து வருமதியா கவும் சேரவேண்டியதாகவும் இருக்கின்றதாதலாலும்,

அத்துடன் யூ. பீ. சீ. வங்கியின் பணிப்பாளர் சபை, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அவர்களுக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டும், ஈடுவைப்பவர் மேற்கூறப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் மேலதிகப்பற்றாகப் பெறப்பட்ட மீதி என்பவற்றின் கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளானரெனத் திருப்திப்பட்டும், மேற்கூறிய பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத் தொன்பது ரூபா இருபத்தேழு சதம் (ரூ.14,97,349.27) கொண்ட காலக்கடன் மீதான நிலுவைத் தொகையையும் மற்றும் நான்கு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து நாநூற்று எண்பத்தாறு ரூபா முப்பது சதம் (ரூ. 4,47,486.30) நிலுவை மேலதிகப் பற்றுக்களையும் கொண்ட பத்தொன்பது இலட்சத்து நாற்பத்துநான்காயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 19,44,835.57) கொண்ட தொகையையும் 2009, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 29 வீதத்தில் அதன் மீதான வட்டியையும் சொல்லப்பட்ட 5917 ஆம் இலக்க ஈட்டுமுறியினதும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி யூ. பீ. சீ. வங்கி அறவிடுவதற்கு உரித்துடையதாகவுள்ள வேறெல்லாத் தொகைகளையும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 5917 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் அதன் பயனைக் கொண்டும் யூ. பீ. சீ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் இன்ன மும் முழுமையாக விபரிக்கப்பட்டதுமான ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களுக்கு அதிகாரமளிக்கும்படி சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குருகோரளே தூனகஹபத்துவே ஏத்துகாலையில் அமைந்துள்ள உடப்புவவத்த என்னும் காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3565 ஆம் இலக்க 2003, யூலை மாதம் 18 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரிக்கப்பட்ட காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கே - இக்காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கே : இக்காணியின் மிகுதிப் பகுதி; தெற்கே : எம். மாகிரெட் பெர்னாந்துவின் காணி ; மேற்கே : நீர்கொழும்பிலிருந்து கொச்சிக் கடை வரை போருதொட்ட வீதி என்னும் எல்லைக்குட்பட்ட ஒரு றூட் இருபத்தியொன்று தசம் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 21.4பே.) விசாலமான காணித்துண்டு.

நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் சி 909/57 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டீ. என். எஸ். கண்ணங்கர,
சபைச் செயலாளர்.

3- 894

---

### மக்கள் வங்கி - -ஓல்கொட் மாவத்தை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 31.07.2009 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

குவிந்த ஹந்திகே சமிந்த சில்வா

''மக்கள் வங்கியிச் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி மிரிஸ்ஸகே நந்தனி பெரேரா அத்தாட்சிப் படுத்திய 2006.12.21 ஆந் திகதி 3939 ஆம் இலக்க ஈடுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் மேற்படி 3939 ஆம் இலக்க முறியின் மீது பதினொரு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 11,62,257.26) இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி பணத்தொகையையும் பதினொரு இலட்சத்து அறுபத்திரண்டா யிரத்து இருநூற்று ஐம்பத்தேழு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 11,62,257.26) 20.11.2008 முதல் விற்பனைத் திகதிவரை ஆண் டொன்றுக்கு 18.5 சதவீதப்படி மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி மிரிஸ்ஸகே

நந்தனி பெரேரா அத்தாட்சிப்படுத்திய 21.12.2006 ஆந் திகதி கொண்ட 3939 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சியனே கோறளை, அதிகாரி பற்று மஹார பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ளதும் கொறககஹாவத்த மற்றும் மில்லகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வி. எவ். ஜே. பெரேரா தயாரித்த 04.03.1991 ஆந் திகதி கொண்ட 11604 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1A என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயித்துக் காட்டப்படும் காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கு : 20 அடி அகலப் பாதை ; கிழக்கில் : வரைபடம் 1B ; தெற்கில் : துண்டு இல. 02; மேற்கில் : திரு. ரூபசிங்கவின் காணி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) (0.0253 ஹெக்,) இது கம்பஹா காணிப்பதிவகத்தில் C307/221 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
(கொழும்பு வடக்கு).

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-903

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நுகேகொடை கிளை)
வாடிக்கையாளரின் பெயர் : பிரிண்ட்நீட் (பிறைவேட்) லிமிட்டெட்

2010.02.24 ஆந் திகதி நடைபெற்ற (முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி என அழைக்கப்பட்ட) பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"பிரிண்ட்நீட் (பிறைவேட்) லிமிட்டெட், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, நவெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1137, 2005, ஓகத்து 08 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 815 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப் பின்னர் சிலவேலைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி மூலம் -

(அ) 2010.01.20 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை இரண்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து முந்நூற்று நாற்பத்து இரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 2,43,342.81) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொளாயிரத்து நான்கு ரூபா அறுபத்தாறு சதம் (ரூபா 2,90,904.66) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஆ) 2010.01.20 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நூற்று முப்பது ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 1,68,130.84) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது இரண்டு இலட்சத்து தொளாயிரத்து தொண்ணூற்று இரண்டு ரூபா முப்பத்தொரு சதம் (ரூபா 2,00,992.31) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(இ) 2010.01.20 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை நான்கு இலட்சத்து முப்பத்தாறாயிரம் ரூபா (ரூ. 4,36,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஐந்து இலட்சத்து இருபத்தோராயிரத்து இருநூற்று பதினேழு ரூபா எட்டு சதம் (ரூபா 5,21,217.08) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஈ) 2010.01.20 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை எழுபத்தாறாயிரத்து தொண்ணூற்று ஒன்பது ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 76,099.97) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது தொண்ணூறாயிரத்து தொளாயிரத்து எழுபத்து மூன்று ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூபா 90,973.84) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(உ) 2009.12.24 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை மூன்று இலட்சத்து எழுபதாயிரத்து நூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 3,70,099.88) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது நான்கு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூபா 4,37,378.22) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஊ) 2010.01.17 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை பதினேழு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து அறுநூற்று

பத்தொன்பது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 17,48,619.65) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது இருபது இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து முந்நூற்று ஐம்பத்து நான்கு ரூபா இரண்டு சதம் (ரூபா 20,43,354.02) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(எ) 2010.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை பதினான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 14,50,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தைந்து வீத (25%) வட்டி மற்றும் பதினான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 14,50,000) கொண்ட தொகையை விஞ்சுகின்றவிடத்து ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29% வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது பதினேழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்று மூன்று ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 17,37,403.69) கொண்ட தொகை மற்றும் 2010.01.19 ஆந் திகதி வரையான வட்டியும்;

தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 815 மற்றும் 1137 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ஐம்பத்துமூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூற்று இருபத்துமூன்று ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 53,22,223.82) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு 12, பெல்மொன்ட் தெரு, இல. 9, "எம். எஸ். ஒக்ஷன்ஸ்" ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சிறியாணி மனம்பேறி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, பொரலஸ்கமுவ ரட்னப்பிட்டியவில் அமைந்துள்ளதும் ''கொடகதுருகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. அஹங்கம அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981, பெப்புருவரி 28 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2602 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ என அடையாளமிடப் பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 2ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : ரட்னபிட்டி உடஹமுல்ல வீதியிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வீதி ; கிழக்கு : துண்டு 2பி; தெற்கு : பீ. எஸ். பெர்னாண்டோவுக்கு சொந்தமான ஆதனம்; மேற்கு : லீலாரத்னவிற்குச் சொந்தமான இதே காணியின் துண்டு 1. இது. பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடையது. தற்போது நுகேகொடை தெல்கஹகந்த காணி பதிவகத்தில் (முன்னர் கல்கிஸ்ஸை காணி பதிவகம்) தலைப்பு எம் 2638/254 (முன்னைய பதிவு எம் 2638/65 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிறி டீ. வியனசூரிய அவர்களால் தயாரிக்கப்பட்டு 1970.08.03 ஆந் திகதியிடப்பட்ட சொல்லப்பட்ட வரைபடம் இல. 237 இல் துண்டு 2ஈ வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியனந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

3-921/1

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கம்பஹா கிளை)
வாடிக்கையாளரின் பெயர் : டி. ஏ. டி. தெமட்டன்பிட்டிய மற்றும் டி. ஏ. டபிள்யூ. தெமட்டன்பிட்டிய

2010.02.24 ஆந் திகதி நடைபெற்ற முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி என அழைக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"தெமட்டன்பிட்டிய ஆரச்சிகே தினேஷ் தெமட்டன்பிட்டிய மற்றும் தெமட்டன்பிட்டிய ஆரச்சிகே விஜயசேன தெமட்டன்பிட்டிய ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. கே. என். பீ. வித்தான அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007.03.29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 8646 மற்றும் 2006.09.12 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 8062 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப் பின்னர் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி மூலம் -

(அ) 2010.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐந்து இலட்சம் (ரூபா 5,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தாறு வீத (26%) வட்டி மற்றும் ஐந்து இலட்சம் (ரூபா 5,00,000) கொண்ட தொகையை விஞ்சுகின்ற விடத்து ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஐந்து இலட்சத்து எழுபதாயிரத்து நாநூற்று ஏழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா 5,70,407.57) கொண்ட தொகை மற்றும் 2010.01.03 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஆ) 2010.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை பத்து இலட்சம் ரூபா (ரூ, 10,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தாறு வீத (26%) வட்டி மற்றும் பத்து இலட்சம் ரூபா (ரூ, 10,00,000) கொண்ட தொகையை விஞ்சுகின்றவிடத்து ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து

பணமுதல் கணக்கின் மீது பதினொரு இலட்சத்து பதினேழாயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 11,17,635.94) கொண்ட தொகை மற்றும் 2010.01.03 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(இ) 2009.12.31 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐம்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்து நான்கு ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ, 59,054.44) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு முப்பது வீத (30%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது அறுபத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது ரூபா இருபத்தேழு சதம் (ரூ, 66,589.27) கொண்ட தொகை மற்றும் 2010.01.03 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஈ) 2009.12.31 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை நான்கு இலட்சம் ரூபா (ரூ, 4,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு முப்பது வீத (30%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது நான்கு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முந்நூற்று பத்தொன்பது ரூபா முப்பத்துமூன்று சதம் (ரூ, 4,57,319.33) கொண்ட தொகை மற்றும் 2010.01.03 ஆந் திகதி வரையான வட்டியும் ;

தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்படட முறி இலக்கங்கள் 8062 மற்றும் 8646 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இருபத்திரண்டு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு ரூபா பதினொரு சதம் (ரூ. 22,12,222.11) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக் கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு 12, பெல்மொன்ட் தெரு, இல. 9, "எம். எஸ். ஒக்ஷன்ஸ்" ஐச் சேர்ந்த நீதிமன்ற ஆணையாளர் மற்றும உத்தரவு பெற்ற ஏலதாரர் சிறியாணி மனம்பேறி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, வேபொடை கிராமத்தில் அமைந்துள்ளதும் "மீகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். டி. ரி. பெட்ரிக் ரெஜினோல்ட் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006.07.08 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2199-2 கே இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடகிழக்கு : வீதி ; தென்மேற்கு : ஷலோனாவினதும் ஏனையோரினதும் மற்றும் டி. ஏ. சுபதேரிஸினதும் ஏனையோரினதும் காணி; வடமேற்கு : வரைபடம் இல. 40 இல் துண்டு ஏ. இது இரண்டு றூட் பதின்நான்கு தசம் ஐந்து மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 14.53பே.) விஸ்தீரணமுடையது.

சொல்லப்பட்ட துண்டு 1, வேபொட கிராமத்தில் அமைந்தள்ளதும் "மீகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1949.12.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 40 இல் துண்டு பி என குறிப்பிடப்பட்ட காணியின் ஒரு மீளநில அளவையாகும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகளாவன - வடக்கு : ஈ. டபிள்யூ. விக்கிரமஆரச்சியின் காணி ; கிழக்கு : கே. கே. பீட்டர் சிஞ்ஞோவின் காணி; தெற்கு : ஷலோ நோனா மற்றும் ஏனையோரின் காணி; மேற்கு : இதன்துண்டு ஏ இது. இரண்டு றூட் பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 15பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணி பதிவகத்தில் சீ 817/87 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியனந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

3-921/2

---

### மக்கள் வங்கி - லக்கி பிளாஸா (309) கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 22.01.2010 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவிலக்கம் (PVS) 34913 கொண்டதும், இல. 984, எத்துல் கோட்டே, கோட்டே என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடைய துமான ஒரு கம்பனியாகிய கங்கோ அரலிய (பிறைவேட்) லிமிட்டெட்டாலும் அங்குல்கஹா கமகே கீர்த்தி ஹரிஸ்சந்திர பெரேரா, ரத்னமால ரேணுகா பெரேரா விவாகத்திற்குமுன் கல்தேரா என்பவர்களாலும் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 30.06.2008 ஆந் திகதிகொண்ட 8172 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறப்பட்டுள்ளது. ஆதலால் இப்பொழுது மேற்படி 8172 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது ரூபா 1,00,00,000 (ஒரு கோடி ரூபா) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது.

ஆதலால் ரூபா 1,00,00,000 (ஒரு கோடி ரூபா) பணத்தொகை யொன்றையும் ரூபா 1,00,00,000 பணத்தொகை மீது 01.04.2009 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 27% (இருபத்தேழு சதவீதம்) மேலும் வட்டியையும் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 8172 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால்

திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை தெற்கு, ராகம் பற்று, ஹெந்தளை பட்டினசபை எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளை கெதவலபிட்டியவில் அமைந்துள்ளதும் பரணவத்த அல்லது மில்லகஹாவத்த அல்லது கெற்றகெலகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ.எல்.பி. நாணயக்கார தயாரித்த 1989, ஓகத்து 16 ஆந் திகதிகொண்ட 6936 ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு 2'' என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், மண், மற்றும் அதனைச் சேர்ந்த அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு ''2'' என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு 1 ; கிழக்கில் : வீதி (தனியார்) மற்றும் ஜீ. எவ். கிளேஸ் என்பவரின் காணி ; தெற்கில் : ஆனந்த ஜயசூரியவின் நெல் வயல் ; மேற்கில் : ரோலண்ட் டீ அல்விஸ் என்பவரின் காணி என்பன அமைந்துள்ளன. மேற்படி 6936 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இரண்டு றூட் எட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 8.5பே.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B 995/165 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணி அண்மைய நிலஅளவையின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேற்படி ஹெந்தளை கெரவலபிட்டியவில் அமைந்துள்ளதும் பரணவத்த அல்லது மில்லகஹாவத்த அல்லது கெற்றகெலகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா தயாரித்த 2006, சனவரி 06 ஆந் திகதிகொண்ட 3317A ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு 2A1'' என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். (துண்டு 2A என்பதன் மறு நிலஅளவை) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், மண், மற்றும் அதனைச் சேர்ந்த அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 2A1 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : 6936 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 1A ; கிழக்கில் : 6936 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2B, 3 அடி அகலப் பாதை; தெற்கில் : இதே காணியின் ஒரு பகுதி; மேற்கில்: தனியார் மற்றும் ரி. ஜே. பீ. பீரிஸ் என்பவரினாலும் ஏனையோரினதும் காணி என்பன அமைந்துள்ளன. மேற்படி 3317A இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் முப்பத்து நாலு தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 34.85பே.).

6936 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2B என்பதன் மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையையும் ஏனைய பொது உரிமையையும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
(கொழும்பு தெற்கு).

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-898

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பம்பலப்பிட்டி கிளை)
வாடிக்கையாளரின் பெயர் : பென்கொம் ரெக்னொலஜி (பிறைவேட்) லிமிட்டெட்

2010.02.24 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

''கடப்பாடுடையவரான பென்கொம் ரெக்னொலஜி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான லக்ஷபத்தி மஹாவிதானலாகே நிஷாலி ஷனிக்கா டீ மெல் ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006.05.17 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2069 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப் பின்னர் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி மூலம் -

(அ) 2010.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐம்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொளாயிரத்து அறுபத்தொன்பது ரூபா எழுபத்தைந்து சதம் (ரூபா 50,64,969.75) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு முப்பது வீத (30%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஐம்பத்திரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு ரூபா இருபத்து நான்கு சதம் (ரூபா 52,92,728.24) கொண்ட தொகை மற்றும் 2010.01.11 ஆந் திகதி வரையான வட்டியும் ;

(ஆ) 2009.12.23 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐம்பது இலட்சம் ரூபா (ரூ, 50,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தாறு வீத (26%) வட்டி மற்றும் ஐம்பது இலட்சம் ரூபா (ரூ, 50,00,000) கொண்ட தொகையை விஞ்சுகின்றவிடத்து ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஐம்பத்திரண்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று எட்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூபா 52,20,698.61) கொண்ட தொகை மற்றும் 2010.01.11 ஆந் திகதி வரையான வட்டியும் ; தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இல. 2069 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ஒரு கோடியே ஐந்து இலட்சத்து பதின்மூவாயிரத்து நாநூற்று இருபத்தாறு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 1,05,13,426.85) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும்

சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பிட்டகோட்டே, இல. 474, மஹாநாம டிரைவ், "ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்" ஐச் சேர்ந்த இரஞ்சித் எஸ். மஹாநாம அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் பெப்பிலியானவில் அமைந்துள்ளது. ஹிக்கஹவத்தை மாவத்தை, வரிமதிப்பு இல. 45/2 ஐக் கொண்டதும் "ஹிக்காவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. ஜீ. பியசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006.05.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 51 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜோய் டீ சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981.08.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1331 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 மற்றும் துண்டு 2 என குறிப்பிடப்பட்ட காணிகளின் ஒன்றிணைப்பின் மீள் நிலஅளவையாக இருக்கின்றன) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, சொல்லப்பட்ட துண்டு ஏ1 இன் எல்லைகளாவன - வடக்கு : 15 அடி அகல வீதி ; கிழக்கு : ஹிக்கஹவத்தை மாவத்தை ; தெற்கு : முன்னர் லிட்டி டீ. மெல் இனது மற்றும் வரைபடம் இல. 1300 இல் துண்டு ஏ இனது எஞ்சிய பாகம்) ; மேற்கு : ஹிக்கஹவத்தை மாவத்தை, வரிமதிப்பு இல. 177/11. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 1351 இற்கமைய இருபத்தாறு தசம் மூன்று சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 26.30பே.) விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை காணி பதிவகத்தில் தற்போது தெல்கந்த- நுகேகொடை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் எம் 2955/122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியனந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

3-921/3

---

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(இராஜகிரிய கிளை)

வாடிக்கையாளரின் பெயர் : "கார்ட்ரிஜ் லங்கா" இன் பங்குதாரர்கள் எம். எச். எம். ஷிஹான், எவ். ஆர். ஹலீம் மற்றும் எஸ். எவ். ஆர். நிஷா என்ற ஏ. ஜீ. எஸ். எவ். ஹலீம் என்ற எஸ். எவ். ஹலீம்

2010.02.24 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாடுடையவர்களான "காட்ரிஜ் லங்கா" இன் பங்குதாரர்கள் மொஹமட் ஹலீம் மொஹமட் ஷிஹான், செய்யதோ பாத்திமா ரஹ்மத் நிஷா எனவும் அழைக்கப்படும் அப்துல் கனி செய்யது பாத்திமா ஹலீம் எனவும் அழைக்கப்படும் செய்யதோ பாத்திமா ஹலீம் மற்றும் பாத்திமா ரினோஷா ஹலீம் அத்துடன் ஈடுவைத்தவர்களான செய்யதோ பாத்திமா ரஹ்மத் நிஷா எனவும் அழைக்கப்படும் அப்துல் கனி செய்யது பாத்திமா ஹலீம் எனவும் அழைக்கப்படும் செய்யதோ பாத்திமா ஹலீம் மற்றும் பாத்திமா ரினோஷா ஹலீம், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, மாச்சு 29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 948 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப் பின்னர் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி இல. 948 இன் மூலம் 2009.12.18 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை முப்பத்தைந்து இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முந்நூற்று ஐம்பத்தைந்து ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 35,87,355.84) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது முப்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தையாயிரத்து ஒரு ரூபா பதினைந்து சதம் (ரூ. 38,75,001.15) கொண்ட தொகை மற்றும் 2009.12.20 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட முறி இல. 948 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை முப்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தையாயிரத்து ஒரு ரூபா பதினைந்து சதம் (ரூ. 38,75,001.15) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கு சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொழும்பு 12, பெல்மொன்ட் தெரு, இல. 9, "எம். எஸ். ஒக்ஷன்ஸ்" ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சிறியாணி மனம்பேறி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச சபை நிருவாக எல்லைகளுக்குள் சியனே கோறளை, அதிகாரி பற்று, வெல்கமவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1987.10.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5204 இல் துண்டு 32 இன் மீள்நிலஅளவையாக இருக்கின்றதும் "கொன்கஹவத்த மற்றும் ஹந்தபானடவெல்ல கும்புர" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993.12.18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4302 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன்

எல்லைகளாவன - வடக்கு : வரைபடம் இல. 5204 இல. துண்டு 58 (20 அடி அகல வீதிக்கான ஒதுக்கு) ; கிழக்கு : வரைபடம் இல. 4302 இல் குறிப்பிடப்பட்ட துண்டு பி ; தெற்கு : வரைபடம் இல. 5186 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 2 ; மேற்கு : வரைபடம் இல. 5204 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 59 (20 அடி அகல வீதிக்கான ஒதுக்கு) இது, பதினெட்டு தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.6பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் சீ 769/61 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச சபை நிருவாக எல்லைகளுக்குள் சியனே கோறளை, அதிகாரி பற்று, வெல்கமவில் அமைந்துள்ளதும் ''கொன்கஹவத்த-பாகம்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993.12.18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4302 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகளாவன - வடக்கு : பொல்ஹேகலகே சரனேலிஸ்ஸினால் உரிமைகோரப்படும் இதே காணியின் பாகம் ; கிழக்கு : பொல்லேகலகே சரனேஸ்ஸினால் உரிமைகோரப்படும் இதே காணி ; தெற்கு : ஓடை ; மேற்கு : வரைபடம் இல. 4302 இல் குறிப்பிடப்பட்ட துண்டு ஏ (வரைபடம் இல. 5204 இல் துண்டு 32) அத்துடன் வரைபடம் இல. 5204 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 31) மற்றும் துண்டு 58 (20 அடிஅகல வீதிக்கான ஒதுக்கு) இது, இரண்டு றூட் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 9பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் சீ 769/58 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 5204 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 58 மற்றும் துண்டு 59 ஆகியவற்றின் மீதும் வழியேயுமான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியனந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

12-921/4

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

### திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2009, நவெம்பர் 12 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

''(கடன்பெறுநரான) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொழும்பு 5, நுககஹாவத்த வீதியிலுள்ள 7 ஆம் இலக்கத்தில் கொண்டுள்ளதுமான பொருக்க பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் ஆகவிருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். வீ. ஜயவர்த்தன அவர்களினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, யூன் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் மற்றும் 28 ஆந் திகதிய 382 ஆம் இலக்க முறிமீதும், 2006, ஒற்றோபர் 13 ஆம், 20 ஆம், 30 ஆந் திகதிய மற்றும் 2006, திசெம்பர் 5 ஆந்திகதிய 445 ஆம் இலக்க முறிமீதும், 2007 ஓகத்து 6 ஆம், 16 ஆம், 20 ஆம் மற்றும் 23 ஆந் திகதிய 462 ஆம் இலக்க முறிமீதும் வருமதியான கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

அத்துடன், கடன்பெறுநர், கீழே பாகம் 1 இல் விபரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவும் 11 ஆம் பாகத்தில் விபரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் குத்தகைப்பற்றுச் சொந்தக்காரராகவும் இருப்பதுடன், சொல்லப்பட்ட முறிகளின் கீழ் அதன் இறையிலி மற்றும் குத்தகைப்பற்று உரிமையையும் உரித்தையும் அக்கறையையும் வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும்,

அத்துடன் 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பன்னிரண்டு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொளாயிரத்து முப்பத்தொரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 12,49,24,931.52) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகளின் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான பன்னிரண்டு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொளாயிரத்து முப்பத்தொரு ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 12,49,24,931.52) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட 382 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான பிரதான தொகையான ஏழு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 7,25,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பத்தொன்பது தசம் மூன்று ஐந்து ஏழு (19.357%) வருமதியான வட்டியையும் சொல்லப்பட்ட 445 ஆம் இலக்க முறிமீது வருமதியான அறுபது இலட்சம் ரூபா (ரூ. 60,00,000) கொண்ட பிரதான தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் மூன்று நான்கு வீதப்படி (18.34%) வருமதியான வட்டியையும், சொல்லப்பட்ட 462 ஆம் இலக்க முறிமீது வருமதியான அறுபத்துமூன்று இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று எழுபத்தேழு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 63,89,677.56) கொண்ட பிரதான தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு தசம் இரண்டு நான்கு வீதப்படி (26.24%) வருமதியான வட்டியையும், எல்லாம் 2009, நவெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிகள் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே பாகம் I இலும் பாகம் II இலும் விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் அந்த ஆதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து மற்றும் அக்கறை என்பன உட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரரான திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

**பாகம் 1 - இறையிலி உரிமைகள்**

1. சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல் கோறளேயின் கடுபிட்ட பத்துவில் லஹுபான கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளரும் மட்டப்படுத்துநருமான எம். பீ. ஜயலத் குமார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, சனவரி 1 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பெனவலகாவவத்த மறுபெயர் ஹேன எனவழைக்கப்படும் காணியின் பாகத்தினதும் மற்றும் ஹுணுகலவத்த என அழைக்கப்படும் காணியின் பாகத்தினதும் ஒன்று சேர்க்கையாகவுள்ளதும், காணித்துண்டம் 16 என அடையாளமிடப் பட்டதுமான ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : குருகொட ஓயா ; கிழக்கில் : எல மற்றும் பெல இனிவெட்ட; தெற்கில் : ஹிரிகலவிலிருந்து மொறன்தொட்டவுக்குச் செல்லும் வீதி (பெருவழி) மற்றும் ; மேற்கில் : பெல இனி வெல; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1317 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட் பதினேழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 17பே.) கொண்டுள்ளதும், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஈ 1145/ 158 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல் கோறளேயின் கடுபிட்ட பத்துவில் லஹுபான கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளரும் மட்டப்படுத்துநருமான எம். பீ. ஜயலத் குமார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, சனவரி 1 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 9 என அடையாளமிடப்பட்டதுமான ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் : ஹுணகல்வத்த எனவழைக்கப்படும் காணியின் எஞ்சியுள்ள பாகம் மற்றும்; மேற்கில் காணித்துண்டம் 10 ; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1317 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் நான்கு தசம் ஒன்பது எட்டுப் பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 4.98பே.) கொண்டுள்ளதும், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஈ 1145/ 203 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

**பாகம் II- குத்தகைப்பற்று உரிமைகள்**

1. சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள கலிகமுவ மற்றும் கேகாலையின் கந்துவிட்ட பத்துவ தெற்கு மற்றும் கந்துஅக பத்துவ, பெலிகல் மற்றும் பறணகுரு கோறளை பெ. அ. அலுவலர் பிரிவில் லஹுபொன மற்றும் ஹால்மஸ்ஸ கிராமங்களில் அமைந்துள்ளதும், ஹுணுகலத் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் உ. நி. டபிள்யு. எம். எல். ஆர். வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 19 ஆந் திகதிய 666 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : குருகொட ஓயா ; கிழக்கில் : காசீ ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகலவத்த; தெற்கில் : பெருவழி மற்றும் ; மேற்கில் : காசீஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகல வத்த; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 666 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஆறு தசம் ஏழு மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.73பே.) கொண்டுள்ளதும், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஈ 1179/ 167 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

(2) சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள கலிகமுவ மற்றும் கேகாலையின் கந்துவிட்ட பத்துவ தெற்கு மற்றும் கந்துஅக பத்துவ, பெலிகல் மற்றும் பறணகுரு கோறளை பெ. அ. அலுவலர் பிரிவில் லஹுபொன மற்றும் ஹால்மஸ்ஸ கிராமங்களில் அமைந்துள்ளதும், ஹுணுகலத் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் உ. நி. டபிள்யு. எம். எல். ஆர். வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 19 ஆந் திகதிய 666 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காசீ ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகலவத்த ; கிழக்கில் : காசீ ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகலவத்தவும் கி. ச. வீதியும் ; தெற்கில் : காசீஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகல வத்த மற்றும் ; மேற்கில் : காசீஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகல வத்தவும் அருவியும் ; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 666 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் ஏழு நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 16.74பே.) கொண்டுள்ளதுடன், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஈ 1179/168 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

(3) சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள கலிகமுவ மற்றும் கேகாலையின் கந்துவிட்ட பத்துவ தெற்கு மற்றும் கந்துஅக பத்துவ, பெலிகல் மற்றும் பறணகுரு கோறளை பெ. அ. அலுவலர் பிரிவில் லஹுபொன மற்றும் ஹால்மஸ்ஸ கிராமங்களில் அமைந்துள்ளதும், ஹுணுகலத் தோட்டம் எனவழைக்கப்படும் காணியினதாய் உ. நி. டபிள்யு. எம். எல். ஆர். வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 19 ஆந் திகதிய 666 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காசீ ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகலவத்த ; கிழக்கில் : காசீ ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகலவத்தவும் கேகாலைப் பெருந்தோட்டக் கம்பனியும் ; தெற்கில் : காசீஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஹுணுகல வத்த மற்றும் ; மேற்கில் : காசீஆணைக்குழுவுக்கும் எம். ஜே. ஆர். ஹசனுக்கும் சொந்தமான ஹுணுகல வத்த ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 666 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பத்திரண்டு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 32.90பே.) கொண்டுள்ளதுடன், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஈ 1179/169 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

4. சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தினுள் பறணகுருக் கேகாலையின் கந்தஹா பத்துவில் ஈலகல்ல மற்றும் ஹுணுகல கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைந்துள்ளதும், பரம்பேத் தோட்டம் ஹுணுகலப் பிரிவு மற்றும் வெளலதென்ன பிரிவு எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஆர். ரீ. கே. ஹேரத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 12 ஆந் திகதிய 2560 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டும் 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 1989 ஆம் இலக்க வயலின் பாகமும் வீதியும் ; கிழக்கில் : 1989 ஆம் இலக்க வயலின் பாகமும் வீதியும் ; தெற்கில் : 1989 ஆம் இலக்க வயலின் பாகம் மற்றும் ; மேற்கில் : தனிப்பட்ட காணி; பரப்பளவில் இது. 2560 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட் ஏழு தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 7.95பே.) அல்லது பூச்சியம் தசம் இரண்டு இரண்டு இரண்டு நான்கு நான்கு ஐந்து ஹெக்டயர்கள் (0.222445 ஹெக்.) கொண்டுள்ளதுடன், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ573/ 14 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

5. மேற்கூறப்பட்ட சபரகமுவ மாகாணத்திலுள்ள கேகாலை மாவட்டத்தினுள் பறணகுருக் கோரளையின் கந்தஹா பத்துவில் ஈலகல்ல மற்றும் ஹுணுகல கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைந்துள்ளதும், பரம்பேத் தோட்டம் ஹுணுகலப் பிரிவு மற்றும்

வெளலதென்ன பிரிவு எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஆர். ரீ. கே. ஹேரத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 12 ஆந் திகதிய 2560 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டும் 2 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 1989 ஆம் இலக்க வயலின் பாகமும் குருகொட ஓயாவும் ; கிழக்கில் : காணித்துண்டம் 5 ; தெற்கில் : வீதியும் 1989 ஆம் இலக்க வயலின் பாகமும் மற்றும் ; மேற்கில் : வீதியும் 1989 ஆம் இலக்க வயலின் பாகமும்; பரப்பளவில் இது. 2560 ஆம் இலக்க வரைபடத்தின்படி பூச்சியம் ஏக்கர் ஒரு றூட் இருபத்தொன்பது தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 29.05பே.) அல்லது பூச்சியம் தசம் ஒன்று ஏழு நான்கு ஆறு நான்கு ஏழு ஹெக்டயர்கள் (0.174647 ஹெக்.) கொண்டுள்ளதுடன், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ573/15 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

6. மேற்கூறப்பட்ட ஈலகல்ல மற்றும் ஹுணுகல கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைந்துள்ளதும், பரம்பேத் தோட்டம் ஹுணுகலப் பிரிவு மற்றும் வெளலதென்ன பிரிவு எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஆர். ரீ. கே. ஹேரத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 12 ஆந் திகதிய 2560 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டும் 3 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 4 ; கிழக்கில் : காணித்துண்டம் 4 ; தெற்கில் : குருகொட ஓயா மற்றும் ; மேற்கில் : காணித்துண்டம் 4; பரப்பளவில் இது. 2560 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 3.00பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் பூச்சியம் ஏழு ஐந்து எட்டு எட்டு ஹெக்டயர்கள் (0.007588 ஹெக்.) கொண்டுள்ளதுடன், கேகாலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் ஏ573/16 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

இச்சாதனம் தொடர்ந்திருக்கும் போது இதன்பின்னர் காலத்துக்குக்காலம் எல்லா நேரங்களிலும் கொண்டுவரப்பட்டு கட்டிடத்தோடு நிரந்தரமாக இணைக்கப்படக்கூடியவையும், இதற்கான பாகம் 1 இலும் பாகம் 11 இலும் விபரிக்கப்பட்ட அசைவற்ற ஆதனத்தின் பாகமாகக் கொள்ளப்படக்கூடியவையுமாக ஆன அசைவற்ற பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி, இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் வேறெல்லா எந்திரத்தொகுதியுடனும், இப்போதுள்ளவையும், இதன் பின்னர் இணைக்கப்படக்கூடியவையுமான எந்திரத்தொகுதியுள் எவற்றையும் மாற்றீடு செய்வதில் நிரந்தரமாக இணைக்கப்படக்கூடியவையுமான எல்லா எந்திரத் தொகுதியுடனும் சேர்த்து.

| இல. | சாதனம் | இலக்கங்கள் | அளவுக் குறிப்பீடு | வகை | மூலநாடு |
|---|---|---|---|---|---|
| 1 | 36 கிவோ, உயர் வோல்ட்டளவு மானியிடுதல், பாதுகாப்பு முகப்புக்கூறு | 1 | 8 பீ. ரீ. ஐ. | சீமன்ஸ் | துருக்கி |
| 2. | 3கிவோ, நடுத்தர வோல்ட்டளவு மானியிடுதல், பாதுகாப்பு மற்றும் ஒத்தகால நிகழ்வினதாக்கும் முகப்புக்கூறு | 2 | 8 பீ. ரீ. ஐ. | சீமன்ஸ் | துருக்கி |
| 3. | பற்றரி மின்னூட்டி | 1 | 24வீ. 150 ஏஎச். | ஏஈஸ் | பிரான்ஸ் |
| 4. | மின்மாற்றிகள் 3150 கேவீஏ | 2 | 3150 கே.வீ.ஏ. 3/33கே.வீ. | எல்ரீஎல் | இலங்கை |
| 5. | மின்மாற்றிகள் 80 கேவீஏ | 1 | 80கே.வீ.ஏ. 0.4/33 கேவீ | எல்ரீஎல் | இலங்கை |
| 6. | 3கிவோ-மின்பிறப்பாக்கி #1 மத்திய கட்டுப்பாட்டு முகப்புக்கூறு | 1 | | உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. | |
| 7. | 3கிவோ - மின்பிறப்பாக்கி #2 மத்திய கட்டுப்பாட்டு முகப்புக்கூறு | 1 | | உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. | |
| 8. | 33கிவோ-எச்வீ மத்திய கட்டுப்பாட்டு முகப்புக்கூறு | 1 | | உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது | |
| 9. | பிரான்சிஸ் டேர்பைன்கள் | 2 | 3000 கிவோ. 66 மீட்டர்கள் தலைப்பில் 4.2 மீ. 3/எஸ்ஸுக் காக வீதமிடப்பட்டது. | குக்லர் | அவுஸ்திரியா |
| 10 | ஹைட்ரோலிக் கூறுகள் | 2 | | | |
| 11 | லுப்ரிகேஷன் எண்ணெய் முறைமை | 2 | | ரொக்வெல் | போலாந்து |
| 12 | ஏவீஆருடன் ஒத்தகால நிகழ்வினைவான மின்றிப்பாக்கிகள் | 2 | 3000கேவீஏ 750 ஆர்பீஎம், 3 கேவீ | டொல்மெல் | போலாந்து |

| இல. | சாதனம் | இலக்கங்கள் | அளவுக் குறிப்பீடு | வகை | மூலநாடு |
|---|---|---|---|---|---|
| 13 | பட்டர்பிளை வால்வுகள் | 2 | | குக்லர் | ஆஸ்திரியா |
| 14 | டேர்பைன் கட்டுப்பாட்டு முகப்புக்கூறு | 1 | | குக்லர் | ஆஸ்திரியா |
| 15 | குறைவான வோல்ட்டளவு முகப்புக்கூறு | 1 | 400வீ | உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. | |
| 16 | வை-பிரான்ச் குழாய் | 1 | | | |
| 17 | கன்ரி உயர்த்தி | 1 | | | |
| 18 | சைகை வடம் | 1 | | | |
| 19 | மின்சக்தி வடம் | 1 | | | |
| 20 | நிலத்தோடிணைத்தல் | 1 | | | |
| 21 | அவசரகால அறுவை மருத்துவ மேசை | 1 | | | |
| 22 | எச்சரிக்கை உபாயம் | 1 | | | |
| 23 | பென்ஸ்டொக் பெனிற்றேஷனின் 329 மீட்டர்கள் | 1 | | | |
| 24 | உயர்அழுத்த ஆளிப்பொறி | 1 | | | |

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

3-791/1

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2009, நவெம்பர் 12 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"(கடன்பெறுநரான) கொழும்பு 5, நுககஹாவத்த வீதியிலுள்ள 7 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பொருக்க பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் ஆகவிருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். வீ. ஜயவர்த்தன அவர்களினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூன் 22 ஆம், 23 ஆம் மற்றும் 28 ஆந் திகதிய 384 ஆம் இலக்க முறியின்மீதும், 2006, ஒற்றோபர் 13 ஆம், 20 ஆம் மற்றும் 30 ஆந் திகதிய அத்துடன் 2006, திசெம்பர் 5 ஆந்திகதிய 446 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

பாகம் 1 இல் விபரிக்கப்பட்ட கடன்பெறுநரின் ஒப்புரவில், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், தெஹியோவிட்ட, தெவலகந்த தோட்டத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தினாலும் (ஈடுவைப்பவர் I), கொழும்பு 3 ரைன்லண்ட் இடத்திலுள்ள 23-25 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அஷ்ரொப் ஓமாரினாலும் (ஈடுவைப்பவர் II), தெஹியோவிட்ட, தெவலகந்தத் தோட்டத்தைச் சேர்ந்த ஆனந்த பராக்கிரம அமரசிங்கவினால் (ஈடுவைப்பவர் III) மற்றும் கொழும்பு 5, நுககஹாவத்த வீதியிலுள்ள 7 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த டிமித்ரி சந்தண குணசேக்கரவினாலும் (ஈடுவைப்பவர் iv) வைத்திருக்கப்பட்ட, ஒவ்வொன்றும் பத்து ரூபாவான (ரூ. 10.00) 1,67,00,000 சாதாரண பங்குகளையும், கீழே II ஆம் பாகத்தில் விவரிக்கப்பட்ட கடன்பெறுநரின் ஒப்புரவில் ஈடுவைப்பவர் I, ஈடுவைப்பவர் II, ஈடுவைப்பவர் III மற்றும் ஈடுவைப்பவர் IV என்போரினால் வைத்திருக்கப்பட்ட, ஒவ்வொன்றும் பத்து ரூபாவான (ரூ. 10.00) 38,00,000 சாதாரணப் பங்குகளையும், கடன்பெறுநரின் ஒப்புரவிலான ஏனைய அக்கறையையும் சொல்லப்பட்ட முறிகளின் கீழ் வங்கிக்கு அவரவர் முறையாக ஈடுவைத்துள்ளதாதலாலும்;

*அத்துடன் 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாகப் ஒரு கோடியே அறுபது இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டு ரூபா எழுபத்தேழு (ரூ. 1,60,59,872.77) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,*

*வங்கியின் பணிப்பாளர் சபையானது 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான ஒரு கோடியே அறுபது இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டு ரூபா எழுபத்தேழு (ரூ. 1,60,59,872.77) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட 384 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான பிரதான தொகையான தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூற்று நாற்பத்தொரு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 97,50,641.26) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பத்தொன்பது தசம் மூன்று ஐந்து ஏழு (19.357%) வருமதியான வட்டியையும் அத்துடன் சொல்லப்பட்ட 446 ஆம் இலக்க முறிமீது வருமதியான பன்னிரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்று நான்கு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 12,57,504.36) கொண்ட பிரதான தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் மூன்று நான்கு வீதப்படி (18.34%) வட்டியையும், எல்லாம் 2009, நவெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிகள் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே பாகம் 1 இலும் பாகம் 11 இலும் விவரிக்கப்பட்ட சொல்லப்பட்ட பங்குகளும் கடன்பெறுநரின் ஒப்புரவிலான ஏனைய அக்கறையும் உத்தரவுபெற்ற ஏலதாரரான திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."*

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

***பாகம் 1***

| *பங்குதாரரின் பெயர்* | *கம்பனியின் பெயர்* | *பங்குகளின் எண்ணிக்கை* | *பங்குச் சான்றிதழ் இல.* | *தேதி* |
|---|---|---|---|---|
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | பொருக்க பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | 01 | 02 | 10.05.2004 |
| திரு. ஆனந்த பராக்கிரம அமரசிங்க | | 01 | 05 | 20.08.2004 |
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | | 4,799,999 | 06 | 20.08.2004 |
| திரு. ஆனந்த பராக்கிரம அமரசிங்க | | 199,999 | 08 | 21.09.2004 |
| திரு. டிமித்ரி சந்தண குணசேக்கர | | 200,000 | 09 | 21.09.2004 |
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | | 6,500,000 | 10 | 16.05.2005 |

*பாகம் II*

| *பங்குதாரரின் பெயர்* | *கம்பனியின் பெயர்* | *பங்குகளின் எண்ணிக்கை* | *பங்குச் சான்றிதழ் இல.* | *தேதி* |
|---|---|---|---|---|
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | பொருக்க பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | 1,260,000 | 11 | |
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | | 3,800,000 | 13 | |
| திரு. அஷ்ரொப் ஒமார் | | 1,771,800 | 14 | |
| திருவாளர் சண்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | | 1,968,200 | 15 | |

மேலே காணம் I இலும், பாகம் II இலும் உள்ள மேலேயுள்ள பங்குச் சான்றிதழ்கள், கொழும்புக் காணிப்பதிவகத்தின் பதிவுப் பிரிவினுள் கொழும்பு 02, நவம் மாவத்தையிலுள்ள 40 ஆம் இலக்கத்தில் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் காப்பான கட்டுக்காப்பில் இடப்பட்டுள்ளன.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

3-791/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.